# காரைக்குடி நகராட்சி
# 2020–2021ம் ஆண்டு நிர்வாக அறிக்கை

## 1. நிர்வாகமும் அமைப்பும்:

இந்நகராட்சி பேரூராட்சியாக இருந்து 09.05.1928 முதல் 3ம் நிலை நகராட்சியாக உயர்வு செய்யப்பட்டது. 14.12.1988 முதல் தேர்வு நிலை நகராட்சியாக செயல்பட்டு தற்போது 28.05.2013 முதல் சிறப்புநிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. அதன் விபரம் பின்வருமாறு

| நிலை | அரசாணை எண் மற்றும் நாள் |
|---|---|
| 3ம் நிலை | 2060 நாள் 9.5.1928 |
| 2ம் நிலை | 347 நாள் 26.2.1947 |
| முதல் நிலை | 143 நாள் 25.1.1973 |
| தேர்வு நிலை | 1076 நாள் 14.12.1988 |
| சிறப்பு நிலை | 74 நாள் 28.05.2013 |

அரசாணை எண்.74 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 28.05.2013ன்படி இணை இயக்குநர் (நிர்வாகம்) நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.39010/2012/எம்3 நாள் 22.10.2013ன்படி தேர்வுநிலை நகராட்சியிலிருந்து சிறப்புநிலை நகராட்சியாக தரம் உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சியின் மொத்தப் பரப்பளவு 13..75 ச.கி.மீ. ஆகும். நகராட்சியின் எல்லைக்குள் அடங்கியுள்ள வருவாய் கிராமப் பகுதிகள்:

1. கழனிவாசல்
2. செக்காலைக் கோட்டை
3. இலுப்பக்குடி புரவு
4. அரியக்குடி புரவு
5. செஞ்சை
6. காரைக்குடி
7. அமராவதி

அறிக்கை ஆண்டில் நகராட்சியின் பரப்பளவில் எவ்வித மாற்றமும் இல்லை.

## மக்கள் தொகை அடங்கியுள்ள மொத்த வட்டங்கள்:

2.11.1967–ம் தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் 2127–ம் எண் அரசாணையின்படி இந்நகராட்சி 24 வட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. 1969ம் ஆண்டில் நடைபெற்ற நகராட்சி தேர்தலில் இருந்து 24 வட்டங்கள் அமுலுக்கு வந்தது. 18.12.1985–ம் தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் 1568ம் எண் அரசாணையின்படி 24 வட்டங்களை 28 வட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. 15.4.1985–ம் நாளைய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை 238ம் எண் அரசாணையின்படி 32 வட்டங்களாகப் பிரிக்கப்பட்டது.

இந்நகராட்சியில் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி உள்ள மக்கள் தொகை ஆண்டு வாரியாக பின் வருமாறு

**1981ஆம் ஆண்டு : 66,993**
**1991ஆம் ஆண்டு : 71,965**
**2001ஆம் ஆண்டு : 86,956**
**2011ஆம் ஆண்டு : 1,06,714 (ஆண்கள் 53.348, பெண்கள் 53.366 இதர,1)**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் அரசாணை எண்.87, 7.9.2006ன்படி 2001ம் ஆண்டின் மக்கள் தொகையின் அடிப்படையில் இந்நகராட்சி 36 வட்டங்களாகப் பிரிவினை செய்யப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. சுழற்சி முறையில் தாழ்த்தப்பட்டோருக்கு வட்டம் எண்.2 மற்றும் வட்டம் எண்.33 பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

**கல்வி நகரம்:**

இந்நகரையொட்டி வள்ளல் டாக்டர் அழகப்ப செட்டியார் அவர்களால் அமைக்கப்பட்ட கலைக்கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, உடற் பயிற்சிக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, பாலிடெக்னிக், மாதிரி உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி ஆகியவை உள்ளன. மேலும் டாக்டர் அழகப்பா பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டு தமிழக அரசால் நடத்தப்பட்டு வருகிறது.

அழகப்பா பொறியியல் கல்லூரிக்கு அருகில் மத்திய மின் வேதியியல் இரசாயனஆராய்ச்சி நிறுவனம் (Central Electro Chemical Research Institute-CECRI) செயல்பட்டு வருகிறது. தேவகோட்டை சாலையில் தொழிற்பேட்டைகளும், ஒரு பெரிய நூல் நூற்பு ஆலையும் இருக்கிறது. நகராட்சிக்கு அருகாமையில் உள்ள பகுதிகளை நகராட்சி எல்லைக்குள் சேர்க்கும் பொருட்டு மாவட்ட ஆட்சியரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி பிரதிநிதிகளின் கருத்துக் கேட்கப்பட்டதில், போதிய ஆதரவின்மையால் அத்திட்டம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**நகர்மன்ற கட்டிட வளாகம்:**

எம்யுடிஎப் திட்டத்தின் மூலம் இந்நகரில் புதிய பேருந்து நிலையம் ஒன்று கட்டப்பட்டு இயங்கி வருகிறது. இப்பேருந்து நிலையத்தின் அருகிலேயே ஐ.யு.டி.பி திட்டத்தின்கீழ் புதிதாக வணிக வளாகக் கட்டிடம் கட்டி பின்னர் இந்நகர்மன்ற அலுவலகத்திற்கு சொந்தமாக கட்டிடம் ஏதும் இல்லாததால் மேற்படி வணிக வளாக கட்டிடத்தையே அலுவலக கட்டிடமாக மாற்றி கடந்த 09.09.1999 முதல் அலுவலகக் கட்டிடமாகவும், நகர்மன்ற கூடமாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## நகர்மன்றம்

கடந்த 24.10.2016ல் நகர்மன்றத்தில் பதவிக் காலம் முடிவுற்றதால், 25.10.2016 முதல் தொடர்ந்து அறிக்கை ஆண்டில் ஆணையாளர் அவர்கள தனி அலுவலராக பதவி வகித்தார்.

**அலுவலகப் பொறுப்பில் உள்ளவர்கள்:**

**ஆணையாளர்**

அறிக்கையாண்டில். திருமதி.க.மாலதி அவர்கள் 01.04.20 முதல் 11.05.2020 முற்பகல் வரை ஆணையர்(பொறுப்பு) பணிபுரிந்து வந்துள்ளார். 11.05.2020 பிற்பகல் முதல் 27.02.2021 முற்பகல் வரை திரு.கே.ரெங்கராஜ் ஆணையர்(பொறுப்பு) ஆகவும், திரு.இரா.லெட்சுமணன் 27.02.2021 பிற்பகல் முதல் அறிக்கை ஆண்டு வரை ஆணையராக பணியாற்றி உள்ளார்.

**பொறியாளர்:**

அறிக்கை ஆண்டில் 01.04.2020 முதல் திரு.க.ரெங்கராசு அறிக்கை ஆண்டு வரை பொறியாளராக பணிபுரிந்து வந்துள்ளார்.

**நகர் நல அலுவலர்:**

அறிக்கையாண்டில் 01.04.2020 முதல் 26.05.2020 வரை திரு.ரவிசங்கர் துப்புரவு ஆய்வர் நகர் நல அலுவலர் (பொறுப்பாகவும்), திரு.எம்.கார்த்திகேயன் நகர் நல அலுவலராக 27.05.2020 அன்றும் திரு.சி.ரவிசங்கர் துப்புரவு ஆய்வர் நகர் நல அலுவலர்(பொறுப்பாக) 28.05.2020 முதல் 24.11.2020 வரையும், 25.11.2020 முதல் அறிக்கை ஆண்டு வரை திரு.எம்.கார்த்திகேயன் நகர் நல அலுவலராக பணிபுரிந்து வந்துள்ளார்.

**நகரமைப்பு அலுவலர்:**

01.04.2020 முதல் 26.02.2021 முற்பகல் வரை திருமதி.க.மாலதி நகரமைப்பு அலுவலராகவும், 27.02.2021 பிற்பகல் முதல் 31.03.2021 வரை திரு.மா.செல்லப்பாண்டி நகரமைப்பு ஆய்வர், நகரமைப்பு அலுவலர் (பொ) ஆகவும் பணிபுரிந்து வந்துள்ளார்கள்.

**மேலாளர்:**

01.04.2020 முதல் 30.08.2021 வரை திருமதி.இரா.ரெங்கநாயகி, மேலாளர் பொறுப்பாகவும் 31.08.2020 முதல் அறிக்கை ஆண்டு வரை திரு.வை.குமார் மேலாளராகவும் பணிபுரிந்து வந்துள்ளார்.

**மன்றக் கூட்டங்கள்:**

அறிக்கை ஆண்டில் 12 சாதாரணக் கூட்டங்கள் கூட்டப்பட்டு அதில் 306 பொருட்கள் மீது முடிவெடுக்கப்பட்டது.

அவசரக் கூட்டம் 6 கூட்டப்பட்டு அதில் 77 பொருட்களுக்கு முடிவு எடுக்கப்பட்டது.

அறிக்கையாண்டில் 4 சிறப்புக் கூட்டம் கூட்டப்பட்டு அதில் 34 பொருட்களுக்கு முடிவு எடுக்கப்பட்டது.

குழுக்கள்:

ஆணையர் மற்றும் தனி அலுவலர் (பொறுப்பு) அவர்களால் கூட்டப்பட்ட குழுக்கூட்டங்களின் விபரங்களும் அவற்றில் முடிவெடுக்கப்பட்ட பொருள்களின் விபரங்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

உள்ளூர்த் திட்டக்குழு:

திருமதி.க.மாலதி நகரமைப்பு அலுவலர் அவர்கள் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ) ஆக 01.04.2020 முதல் 11.05.2020 முற்பகல் வரையும், திரு.க.ரெங்கராசு, பொறியாளர் அவர்கள் 11.05.2020 முதல் 27.02.2020 முற்பகல் வரை தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ) செயலராகவும், திரு.இரா.லெட்சுமணன் 27.02.2021 பிற்பகல் முதல் ஆணையர் அவர்கள் தனி அலுவலர் மற்றும் ஆணையர் செயலராக பதவி வகித்தார்கள்.

| குழுக்கள் விபரங்கள் | கூட்டப்பட்ட கூட்டங்கள் | ஒத்திவைக்கப்பட்ட கூட்டங்கள் | முடிவு செய்யப்பட்ட பொருள்கள் |
|---|---|---|---|
| உள்ளூர்த் திட்டக்குழு: | -- | -- | -- |

நியமனக்குழு:

அறிக்கையாண்டில் நியமனக்குழு தலைவராக திருமதி.க.மாலதி நகரமைப்பு அலுவலர் அவர்கள் 01.04.2020 முதல் 11.05.2020 முற்பகல் வரையும் திரு.க.ரெங்கராசு பொறியாளர் அவர்கள் 11.05.2020 பிற்பகல் முதல் 27.02.2020 முற்பகல் வரையும் தனி அலுவலர் மற்றும் ஆணையர் (பொறுப்பாகவும்) திரு.இரா.லெட்சுமணன் அவர்கள் 27.02.2021 பிற்பகல் முதல் 31.03.2021 வரை தனி அலுவலர் மற்றும் ஆணையராக பதவி வகித்து வருகிறார்கள்.

| குழுக்கள் விபரங்கள் | கூட்டப்பட்ட கூட்டங்கள் | ஒத்திவைக்கப்பட்ட கூட்டங்கள் | முடிவு செய்யப்பட்ட பொருள்கள் |
|---|---|---|---|
| நியமனக்குழு | -- | -- | -- |

நிர்வாகம்:

அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அறிக்கை ஆண்டில் ஊதியமாக ரூ.11,26,11,196/- வழங்கப்பட்டுள்ளது. அலுவலர்கள் நியமனம் செய்தல், தண்டனைகள் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் 05.01.1977ம் நாளைய 20, 21, 22 நிர் உத்தரவின்படி நடைமுறைகள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

## பொறியில் பிரிவு:

அறிக்கை ஆண்டில் 2ம் நிலை நகராட்சி பொறியாளர் ஒருவரும் உதவிப் பெறியாளர் ஒருவரும், வரைவாளர் ஒருவரும், வேலை ஆய்வர் ஒருவரும் இப்பிரிவில் பணியாற்றினர்.

## சாலைகள் கட்டிடங்கள் பராமரிப்பு

1. நகருக்குள் 12.819 கி.மீ மாநில நெடுஞ்சாலை உள்ளது. இது தவிர நகராட்சியில் 146.913 கி.மீ நீளமுள்ள சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

2. அறிக்கை ஆண்டில் இறுதிக் கணக்கின்படி இந்நகராட்சி 146.91 கி.மீ நீளமுள்ள சாலைகளை நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | சாலைகளின் விபரம் | கி.மீ |
|---|---|---|
| 1 | சிமிண்ட் கான்கிரீட் சாலைகள் | 12.050 |
| 2 | தார்தளம் சாலைகள் | 130.942 |
| 3 | கப்பி சாலைகள் | 2.900 |
| 4 | மண் சாலைகள் | 0.030 |
| 5 | இதர சாலைகள் | 0.991 |
| மொத்தம் | | 146.913 |

### அறிக்கை ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள் விபரம்:
### பொது நிதி வேலைகள் 2020–21

| வ.எண் | வேலையின் பெயர் | எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள் | முடிக்கப் பட்ட பணிகள் | மதிப்பீடு | செலவுத்தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|
| 1 | பாலம் மற்றும் வடிகால் அமைத்தல் | 11 | 11 | 66.20 | 66.20 |
| 2 | கட்டிடப் பணிகள் | 9 | 8 | 52.90 | 45.90 |
| 3 | குடிநீர் விநியோகம், குடிநீர் அபிவிருத்திப் பணிகள் | 3 | 3 | 14.00 | 14.00 |
| | மொத்தம் | 23 | 22 | 133.10 | 126.10 |

### திட்டப்பணிகள் 2020–21

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள் | முடிக்கப் பட்ட பணிகள் | மதிப்பீடு | செலவுத்தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | பாதாள சாக்கடை திட்டப் பணி – 2015–16 | 1 | 0 | 11253.00 | 9990.00 |
| 2 | திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் – 2018–19 | 11 | 9 | 1264.00 | 806.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | திடக்கழிவு மேலாண்மை பணிகள்– 2019–20 | 1 | 1 | 18.00 | 18.00 |
| 4 | ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டுத் திட்டம் – 2018–19 | 12 | 11 | 1993.00 | 1886.00 |
| 5 | தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாடு திட்டம் 2019–2020 | 7 | 7 | 1000.00 | 905.00 |
| 6 | ஊரணிகள் மேம்பாடு திட்டம் 2018–2019 | 6 | 6 | 396.00 | 396.00 |
| 7 | மூலதன மான்ய நிதி–2019–20 (துய்மை பணியாளர்கள் குடியிருப்பு கட்டுதல்) | 1 | 0 | 300.00 | 153.00 |
| 8 | 14வது நிதிக்குழு மான்ய நிதி–2019–20 (சாலைப் பணிகள்) | 7 | 7 | 317.00 | 297.00 |
| 9 | கல்வி நிதி 2019–2020 | 2 | 1 | 50.00 | 25.00 |
| 10 | சிவகங்கை பாராளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி 2019–2020 | 1 | 1 | 8.70 | 8.70 |
| 11 | சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி 2019–2020 | 4 | 4 | 30.00 | 30.00 |
| | மொத்தம் | 53 | 47 | 16629.70 | 14514.70 |

<u>உந்துவண்டி (மோட்டார் வரி) வரிகளின் பேரில் தமிழக அரசு வழங்கும் மானியத் தொகைகளின் விபரம்</u>

வாகனச் சட்டத்தின்படி மானியம் ஏதும் அறிக்கையாண்டில் பெறப்படவில்லை.

**<u>தளவாடச் சாமான்களும் வாகனங்களும்:</u>**

தளவாடச் சாமான்கள் மற்றும் பராமரிப்புச் செலவுகள் அறிக்கை ஆண்டில் செய்யப்படவில்லை.

**<u>தெருவிளக்குகள்:</u>**

01.04.2020 முதல் 31.03.2021 முடிய அறிக்கையாண்டில் கீழ்க்கண்டவாறு தெருவிளக்குகள் M/s. மாருதி டிரேடர்ஸ் கண்ஸ்ட்ரக்சன், தேனி என்ற தனியார் நிறுவனம் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| வ. எண் | விளக்குகளின் தன்மை | அறிக்கை ஆண்டு 2020–2021 | சென்ற ஆண்டு 2019–2020 |
|---|---|---|---|
| 1 | 40 வாட்ஸ் டியூப் லைட்டுகள் | 2632 | 2632 |
| 2 | 1x28 மின்சிக்கன விளக்கு | 1166 | 1166 |
| 3 | 4x24 மின்சிக்கன விளக்கு | 314 | 314 |
| 4 | 125 வாட்ஸ் சோடியம் விளக்குகள் | 72 | 72 |

| | | | |
|---|---|---|---|
| 5 | 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் | 200 | 200 |
| 6 | உயர்மின் கோபுர விளக்குகள் (8) | 72 | 72 |
| 7 | 80 வாட்ஸ் LED விளக்குகள் | 36 | 36 |
| மொத்தம் | | 4492 | 4492 |

**குடிநீர் வழங்குதல்:**

இந்நகராட்சியின் மேற்கு எல்லையில் மதுரை சாலையில் 0.200 கி.மீ துாரத்தில் நகராட்சிக்கு சொந்தமான சம்பை ஊற்று என்ற இடத்திலிருந்து 13 ஆழ்குழாய் கிணறுகள் மூலம் நகருக்கு குடிதண்ணீர் வழங்கப்படுகிறது. தேவகோட்டை சாலையில் 10,000 லிட்டர் கொள்ளளவில் தரை மட்டத் தொட்டி அமைக்கப்பட்டு இரண்டு ஆழ்துளைக் கிணற்றிலிருந்து நீரேற்றி குடிநீர் விநியோகம் செய்ய ஒரு உந்து நிலையம் செயல்பட்டு வருகிறது. கீழ்க்கண்ட விபரப்படி உள்ள 10 மேல்நிலை தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இவற்றை தவிர நகரினுள் 26 ஆழ்துளைக் கிணறுகள் மூலம் குடிநீர் எடுக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்படுகிறது.

| வ.எண் | மேல்நிலைத் தொட்டி அமைந்துள்ள இடத்தின் விபரம் | கொள்ளளவு (லட்சம் லிட்டர்) |
|---|---|---|
| 1 | கல்லுக்கட்டி மேல்நிலைத் தண்ணீர் தொட்டி | 1.65 |
| 2 | மகர்நோன்பு பொட்டல் கீழ்மட்ட நீர்த் தேக்கத் தொட்டி | 15.00 |
| 3 | மகர்நோன்பு பொட்டல் கீழ்மட்ட நீர்த் தேக்கத் தொட்டி | 3.00 |
| 4 | சாத்தப்பா பூங்கா நடுமட்ட நீர்த் தேக்கத் தொட்டி | 15.00 |
| 5 | சாத்தப்பா பூங்கா நடுமட்ட நீர்த் தேக்கத் தொட்டி | 3.00 |
| 6 | திருச்சி சாலை மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி | 2.50 |
| 7 | சுப்பிரமணியபுரம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி | 4.00 |
| 8 | சூடாமணிபுரம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி | 8.00 |
| 9 | செஞ்சை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி | 8.00 |
| 10 | கழனிவாசல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி | 3.00 |

குடிநீர் நாள் தோறும் காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை விநியோகம் செய்யப்பட்டுகிறது. நாள் 1க்கு சுமார் 120.00 லட்சம் லிட்டர் தண்ணீர் நகர மக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு 112 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீர் விநியோகத்தில் நகராட்சி திட்டமிட்டு விநியோக பணிகள் செய்து வருவதால் கடும் வறட்சியான காலங்களில் கூட தண்ணீர் தட்டுப்பாடு இல்லாமல் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

அறிக்கை ஆண்டில் இத்துறையில் அடியிற்கண்டபடி பணியாளர்கள் பணிபுரிந்துள்ளார்கள்.

| வ.எண் | பணியாளர் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | குழாய் பொருத்துனர் | 1 |
| 2 | நீர்த்தேக்கத் தொட்டி காவலர் | 1 |

வீட்டுக் குடிநீர் குழாய்கள் 14866 எண்ணங்களும் பொதுக் குழாய்கள் 353எண்ணங்களும் செயல்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் வசூலிக்கப்பட்ட குடிநீர் கட்டணம் ரூ.191.16 இலட்சம் ஆகும்.

சென்ற நிதி ஆண்டில் ரூ.191.16 இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

<u>பாதாள சாக்கடைத் திட்டம்:</u>

இந்நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டப் பணி ரூ.112.53 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 18.05.2017 முதல் நடைபெற்று வருகிறது.

தற்போது பயன்பாட்டில் உள்ள மழைநீர் வடிகாலின் நீளம் (PUCCA) 51.260 கி.மீ. மற்றும் மண்வெட்டு வடிகாலின் நீளம் (Katcha) 142.00 கி.மீ. ஆகும்.

<u>பொது சுகாதாரப் பிரிவு – மருத்துவ வசதி:</u>

நகராட்சியால் ஒரு தாய்சேய் நல மையங்கள் நடத்தப்பட்டு வருகிறது. 1.10.1965–ம் தேதி முதல் தனியார்கள் மருத்துவமனைகளும் இந்நகரில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி செஞ்சை மற்றும் முத்துப்பட்டிணம் உள்ள தாய்சேய் நல மையங்கள் நகர்நல மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது.

<u>பணியாளர்களும் செயல்முறைகளும்:</u>

அறிக்கையாண்டில் இந்நகரில் சுகாதாரப் பணிகளுக்கு நகர்நல அலுவலர், 5 துப்புரவு ஆய்வர்களும், 8 துப்புரவுப் பணி மேற்பார்வையாளர்களும் பணிபுரிந்து வருகிறார்கள். அறிக்கையாண்டில் கொசு ஒழிப்பு களப்பணி உதவியாளர் ஒருவரும் பணிபுரிந்து வருகிறார்.

இந்நகரில் 17 சமுதாய கழிப்பிடங்களும் 6 பொது கழிப்பறைகளும் தொடர்ந்து நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் மாற்றுத் திறனாளிகளுக்கான கழிப்பிடம் நான்கு இடங்களில் கட்டப்பட்டு வருகிறது.

<u>தூய்மை நகரத் திட்டம் :</u>

அறிக்கை ஆண்டில் இந்நகரில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தை திறம்பட செயல்படுத்த தூய்மை நகரத் திட்டம் 2008 வகுக்கப்பட்டு, புதிய சுற்றுச் சூழல் கொள்கை உருவாக்கப்பட்டது. அதன்படி 100 சதவீதம் வீடு வீடாக குப்பை பிரித்தெடுத்து சேகரிக்கும் பணியினை தனியார் நிறுவனம் மூலம் 1.1.2008 முதல் செயல்படுத்தப்படுகிறது. இந்த பணிகள் மேலும் சிறப்பாக செயல்படுத்தப்படும் நோக்கத்துடன் 01.03.2013 முதல் இந்நகராட்சியில் உள்ள 12 வார்டுகள் மற்றும் நகரின் முக்கிய தெருக்கள் தனியார் மயப்படுத்தப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

<u>வரைவு துணை விதிகள் :</u>

1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு எண்.306 விதி 4 (3) செட்யூல் 3 பாரா எண்2ன் கீழ் இந்நகராட்சிக்கென நகராட்சி திடக்கழிவு மேலாண்மைத் திட்ட மேலாண்மை மற்றும் கையாளுதல் துணை விதிகள் 2007 இயற்றப்பட்டு, அதன்படி வணிக நிறுவனங்களிடம் இருந்து மாதாந்திர சேவைக் கட்டணம் மற்றும் விதிகளை மீறுவோரிடமிருந்து அபராதத் தொகை வசூல் செய்யப்பட்டு வருகிறது. இத்துணை விதிகள் நகர்மன்றத்தீர்மானம் எண்.322 நாள் 07/08/2014 ன்படி திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

**விழிப்புணர்வு இயக்கம் :**

அறிக்கை ஆண்டில் இத்திட்டத்தினை திறம்பட செயல்படுத்த இத்திட்டம் குறித்து விளம்பரம் பேனர்கள் நகரின் முக்கிய இடங்களில் நிறுவப்பட்டது. வீடுகள் தோறும் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டது.

**பிறப்பு விகிதமும் தாய்மை சிகிச்சையும் ;**

பிறப்பு இறப்பு பதிவுகள் 5 பிறப்பு இறப்பு பதிவு அலுவலகங்களில் 8 யூனிட்டுகளாக பதிவு செய்யப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் 2863 பிறப்புகளும், சென்ற ஆண்டில் 3150 பிறப்புகளும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**கொக்கிப்புழு நோய்:** இந்நகரில் கொக்கிப்புழு நோய் ஏதும் இல்லை.

**திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் :**

சிவகங்கை மாவட்டத்திலுள்ள மூன்று நகராட்சிகளில் காரைக்குடி நகராட்சி சிறப்புநிலை நகராட்சியாகும். இந்நகரில் கல்விக்கு பெயர் பெற்ற அழகப்பா பல்கலைக் கழகம் மற்றும் பொறியியற் கல்லூரிகள் உள்ளன. மேலும் இங்கு அன்றாடம் வந்து போகும் மக்கள் தொகை அதிகமாகும்.

காரைக்குடி நகரினைப் பற்றி முக்கிய விபரங்கள்

| | |
|---|---|
| 1. பரப்பளவு | – 13.75 ச.கி.மீ |
| 2. மக்கள் தொகை (2011 ஆண்டு கணக்கெடுப்பின்படி) | – 106714 |
| 3. மொத்த வார்டுகள் எண்ணிக்கை | – 36 |

பொது சுகாதாரத் துறையின் மூலம் நகரின் சுகாதாரத்தை பேணி காத்து வரப்பட்டு வருகிறது. பொது சுகாதாரத் துறையில் மொத்தம் 8 சுகாதார மண்டலங்கள் உள்ளன. ஒவ்வொரு சுகாதார மண்டலத்திலும் துப்புரவு ஆய்வர்கள், துப்புரவுப் பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் துப்புரவுப் பணியாளர்கள் பணிபுரிகின்றன.

| | |
|---|---|
| துப்புரவு ஆய்வர்கள் | – 5 |
| துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் | – 8 |
| துப்புரவுப் பணியாளர்கள் | – 126 |
| தனியார்மய துப்புரவு பணியாளர்கள் | – 230 |

தினசரி மண்டல அலுவலகங்களில் துப்புரவுப் பணியாளர்கள் வருகைப் பதிவினை, துப்புரவுப் பணி மேற்பார்வையாளர்கள் பதிவு செய்கின்றனர். வருகை புரியாத பணியாளர்கள் மீது உரிய முறையில் நடவடிக்கை மேற்கொண்டு தினசரி பணி எவ்வித தொய்வும் இன்றி நடைபெற்று வந்து கொண்டுள்ளன. நகராட்சி ஆணையர் மற்றும் துப்புரவு ஆய்வர்கள் ஆகியோரால் தினசரி மேற்படி பணியினை ஆய்வு செய்து நகரின் சுகாதாரத்தினை நன்கு பேணிகாத்து வரப்பட்டு கொண்டிருக்கின்றது.

குப்பை எரித்தல் தடுத்தல் குறித்த விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. மேலும் தினசரி விளம்பர விழிப்புணர்வு வாகனங்கள், கேபிள் டி.வி. மூலம் விளம்பரப்படுத்தப்பட்டது. விளம்பர ஊர்தியில் மைக் செட் பொருத்தி நகரில் 15 நாட்களுக்கு ஒருமுறை விளம்பரம் செய்யப்பட்டு வருகிறது.

**ஆரம்ப நிலை சேகரம் : Primary Collection**

இந்நகரில் உள்ள 36 வார்டுகளிலும் உள்ள 26745 வீடுகள் மற்றும் 2462 வணிக நிறுவனங்களிலிருந்து நகராட்சி பணியாளர்கள் மற்றும் தனியார்மய பணியிடங்கள் மூலம் வீடு வீடாக குப்பைகள் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தினசரி பிரித்தெடுத்து சேகரிக்கப்படுகின்றன. மற்றும் துப்புரவு பணியாளர்கள் தெருக்கள் கூட்டுதல், பேருந்து நிலையம், மார்க்கெட் மற்றும் கடை வீதிகள் சுத்தம் செய்தல், சாக்கடை சுத்தம் செய்தல் போன்ற பணிகள் தினசரி செய்து வருகின்றனர்.

| | |
|---|---|
| நாள் 1க்கு வெளியாகும் குப்பை அளவு | : 270 கிராம் / 1 நபர் |
| அதன்படி தினசரி வெளியாகும் குப்பை அளவு | : 48 மெ.டன் |

நகராட்சிப் பயன்பாட்டுக்கென 10 குப்பை அள்ளும் தள்ளு வண்டிகளும், 30 டிரை சைக்கிள்கள், 58 பேட்டரி பொருத்தப்பட்ட வாகனம் மற்றும் 10 ஆட்டோக்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**<u>இரண்டாம் நிலை சேகரம் : Secondary Collection</u>**

இந்நகராட்சியில் தினசரி வீடு வீடாக சேகரிக்கும் குப்பைகளை கலவை உரக் கிடங்கிற்கு கொண்டு செல்ல கீழ்க்காணும் வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளன.

| | | |
|---|---|---|
| 1. டிப்பர் லாரி | – | 2 எண்ணம் |
| 2. ஆட்டோ டிப்பர் | – | 10 எண்ணம் |
| 3. காம்பேக்டர் வாகனம் | – | 2 எண்ணம் |
| 6. காம்பேக்டர் பின் | – | 60 எண்ணம் |

இவற்றில் டம்பர் பிளேசர் வாகனங்கள் மற்றும் தொட்டிகள் தனியார் நிறுவனத்திற்கு குப்பைகளை கொண்டு செல்வதற்கு வழங்கப்பட்டுள்ளது.

**<u>1) அபாயகரமான மருத்துவமனை கழிவுகளை அகற்றுதல் (Bio-Medical Waste):</u>**

நகரில் உள்ள இந்திய மருத்துவர்கள் சங்கம் மூலமாக மருத்துவமனைகளில், சேரும் மருத்துவ கழிவுகளை அந்தந்த மருத்துவமனையிலிருந்து தனியார் நிறுவனமான மெடிகோர் என்விரோ சிஸ்டம், தஞ்சாவூர் வாகனம் மூலம் அப்புறப்படுத்தி அக்கழிவுகளை தஞ்சாவூரில் அமைக்கப்பட்டுள்ள Incinerator மூலம் எரிக்கப்பட்டு வருகிறது. மற்ற சாதாரண கழிவுகள் நகராட்சி வாகனங்களில் சேகரிக்கப்பட்டு கலவை உரக்கிடங்கில் ஆழப்புதைத்தல் மூலம் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கென அனைத்து மருத்துவமனைகளில் இருந்தும் சேவைக்கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

**<u>ஒருமுறை உபயோகம் செய்யும் பிளாஸ்டிக் பொருட்கள் தடை செய்தல்:</u>**

அரசு உத்திரவின்படியும் காரைக்குடி நகர்மன்றத் தீர்மான எண். நாள் படியும் மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு நாள்.05.09.2019–ன்படியும் காரைக்குடி நகராட்சிப் பகுதியில் ஒருமுறையே உபயோகம் செய்யப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் (Carry bag) பிளாஸ்டிக் கப்புகள், பிளாஸ்டிக் தட்டுகள் முதலானவைகள் உற்பத்தி செய்வது, உபயோகம் செய்வது, விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

இந்நகராட்சிப் பகுதியில் மேற்கண்ட பொருட்கள் உபயோகம் நிரந்தரமாக தடை செய்யப்பட்டதால் தொடர்ந்து மேற்கண்ட பொருட்கள் விற்பனை செய்யும் நிறுவனங்கள், உபயோகிக்கும் கடைகள் ஆகியன முன்அறிவிப்பு இன்றி திடீரென ஆய்வு செய்யப்பட்டு தடை செய்யப்பட்ட பொருட்கள் விற்பனை மற்றும் உபயோகத்தில் இருந்ததை கைப்பற்றப்பட்டு

அழிக்கப்பட்டன. இதன் மூலம் 4,05,500/— அளவிற்கு அபராதத் தொகை வசூல் செய்யப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஒருமுறை உபயோகம் செய்யப்படும் பிளாஸ்டிக் பொருட்களின் உபயோகம் இந்நகராட்சிப் பகுதியில் குறைந்துள்ளன.

<u>**கலவை உரம்:**</u>

இந்நகர் சர்வே வார்டு 17, தேவகோட்டை சாலை, பிளாக் எண்.11, நகரளவு எண்.468ல் 13.70 ஏக்கர் பரப்பளவில் நகராட்சிக்குச் சொந்தமான உரக்கிடங்கு அமைந்துள்ளது.

இந்நகராட்சியில் தினசரி உற்பத்தியாகும் 48.00 மெ.டன் குப்பைகளில் 28.00மெ.டன் அளவு மக்கும் கழிவுகள் சேகரிக்கப்பட்டு காரைக்குடி நகராட்சி பகுதிகளில் கட்டப்பட்டுள்ள நான்கு நுண் உர செயலாக்க மையங்களில் 16மெ.டன்களும், நகர் பகுதியில் அமைந்துள்ள 22 RCC மையங்களில் 6 மெ.டன் குப்பைகளும் மேலும் இந்நகர் பகுதியில் மொத்த குப்பைகள் உருவாக்கும் (BWG) அவர்களே 6 மெ.டன் குப்பை கழிவுகளை உரமாக்கி விடுகின்றனர். இவ்வாறு இம்மையங்களின் மூலம் சேகரிக்கப்படும் விவரங்கள் இப்பகுதியில் அமைந்துள்ள விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இந்நகர் பகுதியில் உருவாகும் உலர் கழிவுகளிலிருந்து விலை போகக் கூடிய கழிவு பொருட்கள் தினசரி துப்புரவு பணியாளர்கள் மூலம் சேகரிக்கப்பட்டு ஒவ்வொரு விபரமும் நகராட்சி அலுவலர்கள் முன்னிலையில் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் தொகை துப்புரவு பணியாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

இந்நகர் பகுதியில்கிடைக்கும் உலர் கழிவுகளிலிருந்து விலை போகாத பிளாஸ்டிக் கழிவுகள் அரியலூரில் உள்ள டால்மியா சிமெண்ட் மற்றும் அல்ட்ரா டெக் சிமெண்ட் நிறுவனத்திற்கு ஊடு எரிபொருளாக பயன்படுத்துவதற்கு அனுப்பப்பட்டு வருகிறது.

எனவே இந்நகராட்சிக்கு மேற்சொன்னவாறு போதுமான இடவசதியுள்ள உரக்கிடங்கு தற்போது பராமரிக்கப்பட்டு வருவதால் புதிதாக உரக்கிடங்கிற்கு இடம் வாங்குவதற்கு கேள்வி எழவில்லை. அதனால் மாசு கட்டுப்பாடு மற்றும் சுற்றுப்புற சூழல் துறையிடம் தடையின்மைச் சான்று பெறப்பட்டுள்ளது.

<u>**உணவுக் கலப்படம்:**</u>

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.64876/2008/கே1 நாள் 31.10.2011 உணவு பாதுகாப்பு நிர்வாக துறை மூலம் உணவு பாதுகாப்பு தர நிர்ணய சட்டம் 2006 மற்றும் விதிகள் 2011ன்படி விதிகள் நடைமுறை மற்றும் நடைமுறைப்படுத்தியது 05.08.2011ல் தனியாக உணவு பாதுகாப்பு அலுவலர் நியமிக்கப்பட்டு, இந்நகராட்சியில் அன்னாருக்கு பயணியர் விடுதியில் தனியாக இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

<u>**அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில்கள்:**</u>

தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 5வது ஷெட்டியூலின்படி ஒப்புக் கொள்ளப்பட்ட இனங்களுக்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டு லைசென்ஸ் வழங்கப்படுகிறது. இத்தலைப்பில் அறிக்கை ஆண்டில் உரிமக் கட்டணமாக ரூ.307155/— வசூல் செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் உரிமக் கட்டணம் ரூ. 595750/—ஆக வசூல் செய்யப்பட்டு உள்ளது.

| <u>கேட்பு</u> | <u>வசூல்</u> | <u>நிலுவை</u> |
|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 2019–2020 | ரூ. 307155 /– | ரூ. 307155/– | ரூ --- |

**கண்காட்சிகளும் விழாக்களும்:**

நகராட்சி எல்லைக்குள் விளம்பரப்படுத்தப்பட்டுள்ள கண்காட்சி விழாக்கள் எதுவும் நடைபெறவில்லை. நகரில் நடைபெறும் முக்கிய கோவில் திருவிழாக்களுக்கு எல்லாம் போதிய சுகாதார வசதிகள் செய்து கொடுக்கப்படுகிறது. திருவிழாக்கள் மூலம் நகராட்சிக்கு வருமானம் எதுவும் கிடையாது. திருவிழாக் காலங்களில் சுகாதாரம் பாதிக்கப்படும் அளவிற்கு நிகழ்ச்சிகள் எதுவும் நடைபெறவில்லை.

**தாய்சேய் நல மையம்:**

4 படுக்கைகள் கொண்ட மகப்பேறு மையம் ஒன்று நகராட்சியால் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. மேலும் எம்.எல்.மெய்யப்பச் செட்டியார் அவர்களால் சொந்தச் செலவில் எம்.எல்.எம்.தாய்சேய் நல மையத்தில் நவீன வசதியுடன் கூடிய கூடுதல் கட்டிடம் அறுவை சிகிச்சைக்குரிய வசதியுடன் கட்டி முடிக்கப்பட்டு நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. அறிக்கையாண்டில் தாய் சேய் மைய பணியிடங்கள் கீழ்க்கண்டவாறு உள்ளது.
–

| | | |
|---|---|---|
| 1. பெண் மருத்துவ அலுவலர் | – 1 | 1 உள்ளார் |
| 2. சுகாதாரப் பார்வையாளர் | – 1 | 1 காலியாக உள்ளது |
| 3. இருப்பிட மூதாய் | – 1 | 1(31.12.20 முதல் காலியாக உள்ளது) |
| 4. மகப்பேறு உதவியாளர் | – 8 | 4 பணியிடம் காலியாக உள்ளது |
| 5. மகப்பேறு ஆயாக்கள் | – 8 | 5 காலியாக உள்ளது |
| 6. அலுவலக உதவியாளர் | – 1 | 1 காலியாக உள்ளது |
| 7. காவலர் | – 1 | 1 உள்ளார் |
| 8. துப்புரவுப் பணியாளர் | – 1 | காலியாக உள்ளது |

நகராட்சி மகப்பேறு இல்லங்கள், அரசினர் மருத்துவமனை தனியார் மருத்துவமனைகள் ஆகியவற்றில் பிறந்த குழந்தைகள் விபரம் கீழ்க்கண்டவாறு உள்ளன.

| வ.எண் | விபரம் | அறிக்கை ஆண்டு 2021 | சென்ற ஆண்டு 2020 |
|---|---|---|---|
| 1 | மகப்பேறு மனையிலும் மகப்பேறு மையங்களிலும் பிறந்தது. | 25 | 54 |
| 2 | நகராட்சி மருத்துவ உதவியாளர்களால் பிரசவம் பார்க்கப்பட்டு வீடுகளில் பிறந்தது. | – | – |
| 3 | அரசினர் மருத்துவமனை மற்றும் தனியார் மருத்துவமனைகளில் பிறந்தது. | 2863 | 1075 |
| 4 | தேர்ச்சி பெறாதவர்களினால் பிரசவம் பார்க்கப்பட்டது. | – | – |
| 5 | இறந்துப் பிறந்த குழந்தைகள் | – | – |

2018ம் ஆண்டில் பதிவான பிறப்புகளில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற மருத்துவ உதவியாளர்களால் பிரசவம் பார்க்கப்பட்டது. சென்ற ஆண்டும் தேர்ச்சி பெற்ற மருத்துவ உதவியாளர்கள் மூலம் 100 சதவீதம் பிரசவம் பார்க்கப்பட்டு உள்ளது.

சென்ற ஆண்டில் 3 குழந்தைகள் இறந்து பிறந்தது. தாய்மை ஏற்படும் பெண்களுக்கு அறிவுரை வழங்கி மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது.

குடும்ப நல நிலையம்:

குடும்ப நல நிலையம் ஒன்று பராமரிக்கப்படுகிறது. குடும்ப நலப் பணியாளர்கள், தகுதியுள்ள தம்பதியர்களுக்கு குடும்ப நல முறைகளை எடுத்துரைத்து அறுவை சிகிச்சை, கருத்தடை வளையம் பொருத்துதல், கருத்தடை மாத்திரை, நிரோத் வழங்கும் பணிகளை செய்கின்றனர். போலியோ சொட்டு மருந்து வழங்கும் பணி, எய்ட்ஸ் நோய் தடுப்பு விழிப்புணர்வு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் ரத்த சோகை மாத்திரைகள் தமிழக அரசால் வழங்கப்படவில்லை.

குடும்ப நல பணியிடங்கள்:

1. மருத்துவ அலுவலர் – காலிப்பணியிடம்
2. சுகாதாரப் பார்வையாளர் – காலிப்பணியிடம்
3. ஏ.என்.எம். – காலிப்பணியிடம்
4. குடும்ப நல களப்பணியாளர் –காலிப்பணியிடம்
5. பண்டக காப்பாளர் எழுத்தர் – காலிப்பணியிடம்

கொசு ஒழிப்பு திட்டத்தின் கீழ் மானியம் ஏதும் பெறப்படவில்லை.

நோய் தடுப்பு முறை:

நோய் தடுப்பு பணியின்கீழ் குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும் தடுப்பு ஊசி மற்றும் மருந்துகளும் கீழ்க்கண்ட விபரப்படி வழங்கப்பட்டுள்ளது.

(2020–21)

| வ.எண் | விபரங்கள் | குறியீடு | அடைவு |
|---|---|---|---|
| 1 | டிபிடி | 1094 | 1112 |
| 2 | டிட்டி (5–6 வயது) பள்ளி நலம் | 3865 | 3898 |
| 3 | ட்டிட்டி (கருவுள்ள தாய்மார்களுக்கு) | 1202 | 1245 |
| 4 | ட்டிட்டி (குழந்தைகள் 10 வயது) பள்ளி நலம் | 4680 | 4848 |
| 5 | ட்டிட்டி (குழந்தைகள் 16 வயது) பள்ளி நலம் | 4235 | 4516 |
| 6 | போலியோ குழந்தைகளுக்கு | 1094 | 1171 |
| 7 | தட்டம்மை தடுப்பு | 1094 | 1165 |
| 8 | பி.சி.ஜி | 1094 | 1171 |

**<u>பொறியியல் பிரிவு:</u>**

அறிக்கை ஆண்டில் **5030** மரங்கள் உள்ளன. எல்லா மரங்களையும் நல்லமுறையில் கண்காணிக்கப்படுகிறது. இவைகளை பராமரிக்க **5** தொழிலாளர்கள் நிரந்தர பணியில் நியமிக்கப்பட்டு பணி செய்து வருகிறார்கள். அறிக்கை ஆண்டில் இனவாரியான மரங்களின் விபரங்கள் கீழ்க்கண்டவாறு உள்ளன.

**<u>இனவாரியாக மரங்கள் விபரம்:</u>**

| வ.எண் | மரங்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | வேம்பு | 988 |
| 2 | யூகலிபடஸ் | 1829 |
| 3 | இலவம் | 345 |
| 4 | புளியமரம் | 242 |
| 5 | பாகினியா | 297 |
| 6 | புங்கை | 324 |
| 7 | வாகை | 252 |
| 8 | வாதமரம் | 53 |
| 9 | பூமரம் | 120 |
| 10 | டெனிஸ்பால் | 125 |
| 11 | டெலிபீசஸ் | 50 |
| 12 | ஆயா | 175 |
| 13 | நீர்மருது | 100 |
| 14 | இழுப்பை | 40 |
| 15 | டெல்டாபாரம் | 30 |
| 16 | பொத்தோடியா | 30 |
| 17 | சிவகுண்டலம் | 30 |
| | மொத்தம் | 5030 |

**<u>நகரமைப்பு பணிகள்:</u>**

**01.04.2020** முதல் **26.02.2021** முற்பகல் வரை திருமதி.கே.மாலதி நகரமைப்பு அலுவலராகவும், **26.02.2021** பிற்பகல் முதல் திரு.மா.செல்லப்பாண்டி நகரமைப்பு ஆய்வர், நகரமைப்பு அலுவலர் (பொறுப்பாக) அறிக்கை ஆண்டு வரை பணிபுரிந்துள்ளார்.

நகரமைப்பு பிரிவில், இரண்டு நகரமைப்பு ஆய்வர்கள், இரண்டு சங்கிலியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

நகரமைப்பு பிரிவைப் பொருத்தமட்டில் காரைக்குடி நகரின் வளர்ச்சிக்கு ஏற்பத் திட்டங்கள் வகுத்து செயல்படுத்தியும், நில ஆர்ஜிதமும், பராதீனம் தொழிற்சாலை பகுதி நிர்ணயம் செய்தல், குடிசைப் பகுதி, மேம்பாட்டுப் பணி திட்டங்களில் உத்தேசிக்கப்பட்டுள்ளபடி அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்தல் போன்ற இனங்களில் நடவடிக்கைகள் எடுத்துச் செயல்பட்டு வருகிறது.

முழுமைத் திட்டம்:

காரைக்குடி நகர் முழுவதையும் அபிவிருத்தி செய்ய முழுமைத் திட்டம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு அரசினரால் ஆணை எண்.1131 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள். 27.12.1984ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இந்த முழுமைத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு நகர் வேகமாக அபிவிருத்தி அடைந்துள்ளதால் தற்காலிக நில உபயோக அபிவிருத்தியை அடிப்படையாக் கொண்டு திருத்தப்பட்ட முழுமைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அரசின் அங்கீகாரம் பெற இவ்வலுவலக கடிதம் எண்.9404/95ஊ2 நாள் 27.7.1995ல் அனுப்பப்பட்டு அரசாணை எண்.247, வீ.வ.ம. நகர்புற வளர்ச்சித் துறை நாள்.10.10.2002ன்படி முழுமைத் திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் ஒப்புதலை பெற்று 6 விரிவு அபிவிருத்தி திட்டத்தையும் மறுஆய்வு செய்திட தேவையான கருத்துரு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் சிவகங்கை அவர்களுக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

விரிவு அபிவிருத்தித் திட்டம் :

காரைக்குடி நகராட்சியில் கீழ்க்கண்ட 2 விரிவு அபிவிருத்தி திட்டங்கள் திருத்தம் செய்யப்பட்டு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 28ன்கீழ் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1. கழனிவாசல் விரிவு அபிவிருத்தித் திட்டம் பாகம் – 1
2. செஞ்சை விரிவு அபிவிருத்தித் திட்டம்

மேலும் கீழ்க்கண்ட அபிவிருத்தி திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டு அபிவிருத்தி பணிகள் செய்யப்பட்டு வருகிறது.

1. இரயில்வே நிலைய விரிவு அபிவிருத்தித் திட்டம் பாகம் –1
2. இரயில்வே நிலைய விரிவு அபிவிருத்தித் திட்டம் பாகம் – 2
3. கழனிவாசல் விரிவு அபிவிருத்தித் திட்டம் பாகம் – 2
4. மீனாட்சிபுரம் விரிவு அபிவிருத்தித் திட்டம்
5. நாகநாதபுரம் விரிவு அபிவிருத்தித் திட்டம் பாகம் – 1
6. நாகநாதபுரம் விரிவு அபிவிருத்தித் திட்டம் பாகம் – 2

கட்டிட மனுக்கள் பற்றிய விபரங்கள்:

| | |
|---|---|
| 1. அறிக்கை ஆண்டில் ஆரம்பத்தில் நிலுவை | – இல்லை |
| 2. அறிக்கை ஆண்டில் பெறப்பட்டவை | – 243 |
| 3. அறிக்கை ஆண்டில் மொத்தம் | – 243 |
| 4. அறிக்கை ஆண்டில் அனுமதி வழங்கப்பட்டவை | – 132 |
| 5. அறிக்கை ஆண்டில் அனுமதி மறுக்கப்பட்டவை | – 69 |
| 6. அறிக்கை ஆண்டில் திரும்ப அனுப்பப்பட்டது | – 42 |

**2020–2021க்கான கட்டிட அனுமதி:**

1401103– கட்டிட அனுமதி கட்டணம் – ரூ.4118489/–
1401403–அபிவிருத்தி கட்டணம் – ரூ. 83567/–
––––––––––
ரூ. 4202056/
––––––––––

தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019 குறித்த அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் துறை நாள்.04.02.2019 அன்று பிறப்பிக்கப்பட்டு புதிய விதிகளின்படி கட்டிட விண்ணப்பங்கள் ஆன்லைன் மூலம் பதிவேற்றம் செய்து கட்டிட அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. தற்போது உள்ளாட்சிகளில் வழங்கப்படும் கட்டிட அனமதி பரப்பளவிற்குரிய அதிகாரப் பகிர்வு கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது.

Housing and Urban Development (UD4(3) Department G.O.(MS)No/154 Dated: 13.10.2020–ன்படி குடியிருப்பு உபயோகக் கட்டிட அனுமதி 10000 சதுரடி பரப்பளவு வரையிலும், வணிக உபயோக கட்டிட அனுமதி 2000 சதுரடி வரையிலும் வழங்கப்பட்டு வருகிறது.

**ஆக்கிரமிப்புகள்:**

| | | |
|---|---|---|
| 1. | அறிக்கை ஆண்டில் ஆரம்பத்தில் நிலுவை | – –– |
| 2. | அறிக்கை ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட ஆக்கிரமிப்புகள் | – 15 |
| 3. | அறிக்கை ஆண்டில் அகற்றப்பட்ட ஆக்கிரமிப்புகள் | – 15 |
| 4. | அறிக்கை ஆண்டில் ஆக்கிரமிப்புகள் நிலுவை | – இல்லை |
| 5. | இதர வருவாய் இனங்கள் | – இல்லை |

**மழைநீர் சேமிப்பு:**

இந்நகராட்சியில் 33244 குடியிருப்புகள் மற்றும் வணிக கட்டிடங்கள் உள்ளன. அனைத்து வீடுகளுக்கும் சென்று மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்த பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் 10 தினங்களுக்குள் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைத்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், புதிதாக வீடுகள், அடுக்குமாடிக் கட்டிடங்கள் மற்றும் வணிக வளாகங்கள் கட்டுவோரிடம் வரைபட அனுமதி பெறும் நிலையிலேயே மழைநீர் கட்டமைப்பு ஏற்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. நகரமைப்பு அலுவலர்களால் முறையான ஆய்வு மேற்கொண்டு கட்டிடம் கட்டி முடிக்கப்படும் நிலையில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதா என கண்டறியப்பட்டு வருகிறது. மேலும், புதிய வரி போடுதல், குடிநீர் இணைப்பு பெறுதல் ஆகியவற்றிற்கு விண்ணப்பம் செய்யும் முன்பு மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதை உறுதி செய்த பின்பே புதிய வரி மற்றும் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது.

காரைக்குடி கண்மாய்க்கு வார்டு 8, 18, 19, 17, 21, 22, 12 மற்றும் 24 ஆகிய வார்டுகளில் இருந்து மழைநீர் அதற்கென கட்டப்பட்டுள்ள கால்வாய் மூலமாக வந்து சேர்கிறது. மேற்படி கால்வாயின் சில பகுதிகளில் மண் தேங்கியும் செடிகள் முளைத்தும் மழைநீர் கண்மாயில் கலப்பதை தடுத்து நகர் வீதியில் சென்று சேதத்தை ஏற்படுத்தப்பட்டதனை செயின் பொக்லின் மற்றும் டிராக்டர் மூலமாக மண்ணை அப்புறப்படுப்பட்டு மழைநீரே எந்த தடையுமின்றி கண்மாய்க்கு கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நகராட்சி பகுதியில் உள்ள 36 வார்டுகளில் 24 குளங்கள் உள்ளன. நகராட்சி மூலம் 14 குளங்கள் பராமரிக்கப்பட்டு வருவதால் மழைநீர் தேங்கி வைப்பதால் தண்ணீர் மட்டம் நிலத்தடிநீர் உயர்ந்துள்ளது.

தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் சாலையோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு அவர்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்த வங்கிகளில் கடனுதவி பெற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டது.

<u>வருவாய் கணக்குகள் – சொத்துவரி:</u>

| வ.எண் | இனங்கள் | ஆண்டு வாடகை மதிப்பின்பேரில் அரையாண்டிற்கு வீட்டுவரி வசூலிக்கப்படும் விவரம் | காலியிட வரி அரையாண்டிற்கு மூலதன மதிப்பின்பேரில் வரி வசூலிக்கப்படும் விவரம் |
|---|---|---|---|
| 1 | பொதுக்காரியங்கள் | 5% | 4% |
| 2 | குடிநீர் வடிகால்கள் | 4% | 1/16% |
| 3 | கழிப்பிட வரி | 1% | 1/16% |
| 4 | விளக்கு வரி | 3% | 1/16% |
| 5 | கல்வி வரி | 2 1/2% | 1/8% |

<u>வண்டி வாகன வரிகள்:</u>

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் அட்டவணை 4 விதி 28(1)–ல் உள்ளபடி வாகனவரி விதிக்கப்பட்டு இருக்கிறது. அறிக்கையாண்டில் வாகன வரித்தொகை ஏதும் இல்லை.

<u>வரிவிதிப்பு விபரம்:</u>

அறிக்கை ஆண்டில் புதிதாக வரி விதிக்கப்பட்ட வரி விதிப்புகளின் எண்ணிக்கை 490 ஆகும். இதன் மூலம் கூடுதலாக எழுப்பப்பட்ட அரையாண்டு கேட்பு ரூ.2090646/– ஆகும்.

<u>மேல்முறையீட்டு மனுக்கள் முடிவு செய்தல்:</u>

அறிக்கை ஆண்டில் பெறப்பட்ட மேல் முறையீட்டு மனுக்கள் இல்லை.

<u>சராசரி வரிக்கணக்கு:</u>

அறிக்கை ஆண்டில் நபர் 1க்கு விதிக்கப்பட்ட சராசரி வரி ரூ.4267/– ஆகும். சென்ற ஆண்டில் ரூ.3933/– ஆகும். அறிக்கை ஆண்டில் வரி விதிக்கப்பட்ட கட்டிடங்கள் 490 ஆகும்.

<u>கடன்கள்:</u>

அரசிடமிருந்து பெற்றுள்ள கடன்களுக்கு அறிக்கை ஆண்டில் வட்டித் தொகை மட்டும் தவணைப் பணமாக செலுத்தப்பட்டுள்ளது. 31.03.2020 ல் மொத்தகடன் நிலுவை ரூ.18,22,00,000/–

**கேட்பு வசூல் நிலுவை விபரம்:**

| ஆண்டு | வரியினம் | | | வரியில்லா இனம் | | |
|---|---|---|---|---|---|---|
| | கேட்பு | வசூல் | நிலுவை | கேட்பு | வசூல் | நிலுவை |
| 18–19 | 2379.90 | 1215.52 | 1164.38 | 843.32 | 249.40 | 593.92 |
| 19–20 | 2055.96 | 1108.92 | 947.04 | 894.54 | 615.66 | 578.82 |
| 20–21 | 2468.52 | 1325.05 | 1143.37 | 1033.37 | 169.31 | 8564.06 |

பெரும்பாலான வரிபாக்கிகளை வசூலிக்க நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## வருவாய் இனங்கள்

**பேருந்து நிலையம்:**

இந்நகராட்சியில் இரண்டு பேருந்து நிலையங்கள் உள்ளன. நகரின் மேற்குப் பகுதியில் இராஜாஜி பேருந்து நிலையமும், நகரின் வடகிழக்குப் பகுதியில் புதிய பேருந்து நிலையமும் இயங்கி வருகிறது.

**இராஜாஜி பேருந்து நிலையம்:**

1968.69ம் ஆண்டில் ரூ.1.65 இலட்சத்திற்கு கிரையம் பெற்று நகராட்சியே பேருந்து நிலையத்தை நிர்வாகித்து வருகிறது. இப்பேருந்து நிலையத்தில் வடகிழக்கு பகுதியில் 7 கடைகளும், கிழக்குப் பகுதியில் 13 கடைகளும், மேற்கு பகுதியில் 8 கடைகளும் பழையஆனந்த ஹோட்டல் 9 கடைகளும் . வடக்கு பகுதியில் 2 கடைகளும் உள்ளது.

இக்கடைகள் அனைத்தும் பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விடப்பட்டு புதுப்பித்து வரப்படுகிறது. மேலும் இப்பேருந்து நிலையத்தில் சைக்கிள் ஸ்டாண்ட் ஒன்று பொது ஏலம் மூலம் ஆண்டு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இப்பேருந்து நிலையத்திற்கு வந்துசெல்லும் பேருந்துகளுக்கு பேருந்து நுழைவுக் கட்டணம் பொது ஏலம் மூலம் ஆண்டு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. பேருந்து நிலையத்தில் பூ விற்பனை செய்து கொள்ளும் உரிமைக்கு ஆண்டு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

**புதிய பேருந்து நிலையம்:**

சர்வே வார்டு 3, சர்வே எண்.1085ல் 2.67 ஏக்கர் பரப்பளவில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.45.62 இலட்சம் செலவில் புதிய பேருந்து நிலையம் கட்டிமுடிக்கப்பட்டு 9.9.1999 முதல் சிறப்பாக இயங்கி வருகிறது. இப்பேருந்து நிலையத்தில் 33 பேருந்துகள் நிறுத்துவதற்கு படிக்கட்டு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் பேருந்து நிலையத்தில் 54 கடைகளும், 1 கட்டண கழிப்பறையும் இலவசமாக இயங்கி வருகிறது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மற்றும் அரசு விரைவு போக்குவரத்து கழகத்திற்கு மாத வாடகை அடிப்படையில் ஒரு அறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 10’x10’ அளவில் பேருந்து நிலையத்தின் காலி இடத்தில் சொந்த செலவில் பெட்டி அமைத்து எஸ்டிடி பூத் நடத்திக் கொள்ளும் உரிமைக்கும் மாத வாடகை அடிப்படையில் ஏலம் விடப்பட்டுள்ளது. புதிய பேருந்து நிலையத்தில் கடை, கட்டிடங்கள், கட்டணக் கழிப்பறைகள், எஸ்டிடி பூத் மற்றும் சைக்கிள் ஸ்டாண்ட் ஆகியவைகளுக்கு ஆண்டுக்கு மொத்த வாடகை வருமானம் ரூ.5951095/– ஆகும். இவற்றில் பேருந்து நுழைவுக் கட்டணம் பூக்கடை உரிமம் இரண்டு பேருந்து நிலையத்திற்கு பொதுவாக குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. கடந்த 3 ஆண்டுகளில் 2 பேருந்து நிலையங்களில் மொத்த ஆண்டு வருமானம் கீழ்கண்டவாறு உள்ளது.

| | | |
|---|---|---|
| 2018–2019 | – | ரூ.3730177/– |
| 2019–2020 | – | ரூ.2672445/– |
| 2020–2021 | – | ரூ.3120295/– |

2 பேருந்து நிலையங்களிலும் பேருந்துக் கட்டணம், பூக்கடை உரிமம் ஆகிய 2 இனங்களில் வசூல் செய்யும் உரிமம் மற்றும் கடந்த 3 ஆண்டுகளில் கிடைத்த வருமானம் கீழ்கண்டவாறு உள்ளது.

| ஆண்டு | பேருந்து நுழைவுக் கட்டணம் | பூக்கடை உரிமம் |
|---|---|---|
| 2018–2019 | 4,43,840/– | 86,032/– |
| 2019–2020 | 5,59,545/– | 1,08,460/– |
| 2020–2021 | 5,87,522/– | 80,370/– |

**சந்தைகள்:**

இந்நகர் பொய் சொல்லா மெய்யர் தெருவில் இந்நகராட்சிக்குச் சொந்தமான அண்ணா தினசரி சந்தை ஒன்று இயங்கி வருகிறது. மேற்படி தினசரி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமைக்கு ஆண்டுதோறும் பொது ஏலம் விடப்பட்டு வருகிறது. மேலும் தினசரி அங்காடியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 42 கடைகளும், 67 திறந்த வெளி கடைகளும், ஒரு உணவு விடுதியும் ரூ.21.24 இலட்சம் செலவில் கட்டப்பட்டு மேற்படி கடைகள் பொது ஏலம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இத்தினசரி சந்தை தவிர மகர்நோன்பு பொட்டலில் விறகு மற்றும் வைக்கோல் விற்பனையாளர்களிடம் தினசரி வசூல் செய்து கொள்ளும் உரிமம் ஆண்டுதோறும் பொதுஏலம் மூலம் விடப்பட்டு வருகிறது. இந்நகராட்சி எல்கைக்குள் சாலை ஓரங்களில் சாமான்களை பரப்பி வைத்து விற்பனை செய்பவர்களிடம் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமைக்கு ஆண்டுதோறும் பொது ஏலத்தில் விடப்பட்டு வருகிறது.

தினசரி சந்தை, வைக்கோல், விறகு சந்தை மற்றும் சாலை ஓரக்கடைகள் மூலம் கடந்த 3 ஆண்டுகளில் கிடைக்கப் பெற்ற வருமானம் கீழ்கண்டவாறு உள்ளது.

| ஆண்டு | சாலையோரம் | விறகு வைக்கோல் | தினசரிச் சந்தை |
|---|---|---|---|
| 2018–19 | 29,00,000/– | – | 8,60,500/– |
| 2019–20 | 30,45,000/– | – | 90,3,525/– |
| 2020–21 | 31,97,250/– | – | 9,48,701/– |

**வாரச்சந்தை:**

இந்நகரில் அருள்மிகு கொப்புடையம்மன் கோவிலுக்கு சொந்தமான வாரச்சந்தை ஒன்று உள்ளது. கழனிவாசல் வாரச்சந்தை ஒன்று உள்ளது. அறிக்கை ஆண்டில் இந்நகராட்சிக்கு ரூ.1331866/– வசூல் செய்யப்பட்டுள்ளது.

**நகராட்சி கட்டிடம் மற்றும் காலியிடங்கள் மூலம் வாடகை:**

| வ. எண் | இடம் மற்றும் கட்டிட விபரம் | எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|
| | | தரை இடம் | கடை | பெட்டிக் கடை | உணவு விடுதி |
| 1 | செக்காலை ரோடு | 1 | 16 | –– | –– |
| 2 | சுப்பிரமணியபுரம் | 1 | 32 | – | 1 |
| 3 | கல்லுக்கட்டி வடக்கு புதிய கடைகள் | – | 18 | – | 1 |
| 4 | கல்லுக்கட்டி கிழக்கு கடைகள் | – | 8 | – | – |
| 5 | கல்லுக்கட்டி மேற்கு கடைகள் | – | 17 | – | – |
| 6 | கல்லுக்கட்டி கிழக்கு பழைய கடைகள் | – | 2 | – | – |
| | | | | | |
| 7 | கல்லுக்கட்டி வடக்கு வெள்ளிவிழாக் கடைகள் | – | 1 | – | – |
| 8 | கல்லுக்கட்டி வடக்கு வெள்ளி விழாக் கடைகள் அம்மன் சன்னதி | – | 12 | –– | – |
| 9 | கல்லுக்கட்டி வடக்கு வெள்ளி விழாக் கடைகள் முதல் தளம் | – | காலியாகவுள்ளது | – | – |
| | | | | | |
| 10 | இரயில்வே ரோடு தீயணைப்பு நிலையம் | – | 1 | – | – |
| | | | | | |
| 11 | ஆவின் பூத் | 9 | – | – | – |
| 12 | ஊனமுற்றோர் பள்ளி | 1 | – | – | – |
| | | | | | |
| 13 | புதிய பேருந்து நிலையக் கடைகள் | – | 55 | – | – |
| 14 | இதர இனங் கள் | –– | 13 | –– | –– |
| 15 | அண்ணா தினசரி சந்தையில பழைய கடைகள் | –– | 11 | –– | –– |
| 16 | அண்ண தினசர சந்தையில் புதியகடைகள் | –– | 41 | –– | –– |
| 17 | புதிய பேருந்து நிலையம் அருகிலுள்ள பூங்காவிலுள்ள கடை | –– | 1 | –– | –– |

இவை தவிர சிவன்கோவில் தென்கிழக்கு மூலையில் உள்ள கட்டிடம் பொறியியல் பிரிவு கிட்டங்கியாகவும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் பயணியர் விடுதி வளாகத்தில் ஆணையர் குடியிருப்பு ஒன்றும் பொறியாளர் குடியிருப்பு ஒன்றும் பயணியர் விடுதி காவலருக்கு ஒரு குடியிருப்பும் உள்ளன. நகராட்சி காலியிடங்கள் மற்றும் கட்டிடங்கள் மூலமாக கடந்த 3 ஆண்டுகளில் வருமானம் கீழ்கண்டவாறு உள்ளன.

2018–19 – ரூ. 2,59,82,850/–
2019–20 – ரூ. 3,36,92,850/–
2020–21 – ரூ.4,40,019,245/–

## <u>இதர இனங்கள் மூலம் வருவாய்கள்:</u>

<u>வண்டிப்பேட்டை:</u>

<u>1. வாடகை கார் உந்து நிலையம் மற்றும் சுற்றுலா உந்து வண்டி நிலையம்:</u>

இந்நகராட்சியில் வண்டிப்பேட்டை கார் ஏதும் இல்லை. இந்நகராட்சி பகுதியில் மகர்நோன்பு அக்ரஹாரத்தில் உள்ள டாக்ஸி ஸ்டாண்டும், கழனிவாசல் ஒ.சிறுவயல் சாலையில் நகராட்சிக்குச் சொந்தமான லாரி மற்றும் மினி லாரி ஸ்டாண்டு ஒன்றும் இயங்கி வருகிறது. கடந்த 3 ஆண்டுகளில் கிடைத்த வருமானம் கீழ்கண்டவாறு உள்ளன.

| | | |
|---|---|---|
| 2018–19 | – | ரூ. 1,44,375/– |
| 2019–20 | – | ரூ. 1,56,593/– |
| 2020–21 | – | ரூ. 1,68,898/– |

<u>2. ஆடு அடிக்கும் தொட்டி:</u>

இந்நகராட்சியில் ஆடு அடிக்கும் தொட்டியில் கட்டணம் வசூலிக்கும் உரிமையை ஒவ்வொரு ஆண்டும் பொது ஏலம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. கடந்த 3 ஆண்டுகளில் கிடைத்த வருமானம் கீழ்கண்டவாறு உள்ளது.

| | | |
|---|---|---|
| 2018–19 | – | ரூ. 3,11,040/– |
| 2019–20 | – | ரூ. 3,67,920/– |
| 2020–21 | – | ரூ. 3,86,316/– |

<u>3. கட்டண கழிப்பிடம்:</u>

நகரின் புதிய பேருந்து நிலையம் மற்றும் இராஜாஜி பேருந்து நிலைய கட்டண கழிப்பிடங்கள் குளியல் அறைகளுடன் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் 3 ஆண்டுகளில் கிடைத்த வருமானம்.

| | | |
|---|---|---|
| 2018–19 | – | ரூ. 12,64,209/– |
| 2019–20 | – | இலவசமாக்கப்பட்டது |
| 2020–21 | – | இலவசமாக்கப்பட்டது |

<u>பலன்தரும் மரங்கள்:</u>

இந்நகராட்சிக்குச் சொந்தமான 87 மரங்கள் உள்ளன. இதில் பலன் கொடுக்கும் மரங்களின் உரிமையை அனுபவித்துக் கொள்ள பொது ஏலம் 3 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்படுகிறது. கடந்த 3 ஆண்டுகளில் இவ்வினத்தில் கிடைத்த வருமானம் கீழ்கண்டவாறு உள்ளது.

| | | |
|---|---|---|
| 2018–19 | – | இல்லை |
| 2019–20 | – | இல்லை |
| 2020–21 | – | இல்லை |

**பயணியர் விடுதி:**

2 அறைகள் கொண்ட பயணியர் விடுதி கட்டிடங்கள் ஒற்றில் உணவு பாதுகாப்பு அலுவலருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மற்றொன்று துப்புரவு பணி தனியாருக்கு ஒப்படைக்கப்பட்டுளது.

**சைக்கிள் நிறுத்தும் நிலையம்:**

இராஜாஜி பேருந்து நிலையத்தில் ஒரு சைக்கிள் நிறுத்தும் நிலையம், புதிய பேருந்து நிலையத்தில் ஒரு சைக்கிள் நிறுத்தும் நிலையம் மற்றும் கல்லுக்கட்டி குடிநீர் மேல்நிலைத் தொட்டி வளாக சைக்கிள் ஸ்டான்ட் பராமரிக்கப்பட்டு வருகிறது. கடந்த 3 ஆண்டுகளில் கிடைத்த வருமானம் கீழ்கண்டவாறு உள்ளது.

| ஆண்டு | இராஜாஜி பேருந்து நிலையம் ரூ. | புதிய பேருந்து நி.லையம் ரூ. | கல்லுக்கட்டி குடிநீர் மேல்நிலைத் தொட்டி ரூ. |
|---|---|---|---|
| 2018–19 | 429500/– | 1515938/– | 261844/– |
| 2019–20 | 450975/– | 1700000/– | – |
| 2020–21 | 473524/– | 1786050/– | – |

| வ.எண். | இனங்கள் | 2018–19 ரூ. | 2019–20 ரூ. | 2020–21 ரூ. |
|---|---|---|---|---|
| 1 | தினசரி மார்க்கட் | 860500 | 903525 | 948701 |
| 2 | வாரச்சந்தை | 1167658 | 903525 | 133866 |
| 3 | (விறகு வைக்கோல்) | – | – | – |
| 4 | பேருந்து நுழைவு கட்டணம் | 443840 | 559545 | 587322 |
| 5 | ஆட்டடிச்சாலை | 311040 | 367920 | 386316 |
| 6 | சைக்கிள் நிறுத்துமிடம் | 2207282 | 2301975 | 2259574 |
| 7 | கட்டண கழிப்பறை | 1704999 | – | 297291 |
| 8 | சாலையோர கட்டணம் | 2900000 | 3045000 | 3197250 |
| 9 | புதிய பேருந்து நிலைய கட்டண கழிப்பறை | 1089270 | – | – |
| 10 | ஓ.சிறுவயல் சாலையில் அமைந்துள்ள நகராட்சி இடத்தில் மினி லாரி ஸ்டாண்டு தினசரி வசூல் | 144375 | 151593 | 145000 |
| 11 | கல்லுக்கட்டியில் புதிதாக கட்டப்பபடடுள்ளகழிப்பறை | 208425 | 218846 | 220000 |
| 12 | கீழஊரணியில் வாம்பே திட்டத்தின் கீழ்கட்டப்பட்ட கழிவறைக்கட்டண வசூல் | 115500 | 121275 | 75291 |
| 13 | கல்லுக்கட்டி கொப்புடையம்மன் கோவில் சுற்றிஅமைக்கப்ட்டுள்ள இரு சக்கரமற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டண வசூல் | 315318 | 331084 | 601000 |
| 14 | முடியரசன் சாலை பூங்கா | 717336 | 848515 | – |
| 15 | தொலைக்காட்சி விளம்பரம் | 41344 | 31500 | 66150 |

**வாய்பேசாதோர் மற்றும் காதுகேளாதோர் பள்ளி:**

சமூக நலத்துறைக்கு மாற்றம் செய்யப்பட்டது.

**பள்ளிச் சத்துணவுத் திட்டம்:**

தமிழக அரசு பொதுப் பணித் துறை ஆணை எண்.1000 நாள் 26.6.82ன்படி 1.7.82 முதல் நகராட்சி பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. நகராட்சியில் 9 ஆரம்பப் பள்ளிகள், இரண்டு உயர்நிலைப்பள்ளிகள் 3 நடுநிலைப் பள்ளிகள் ஆகமொத்தம் 14 பள்ளிகளில் சத்துணவு மையங்கள் இயங்கி வருகிறது.

ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு அமைப்பாளர், ஒரு உதவியாளர், ஒரு சமையலர் வீதம் பணிபுரிந்து வருகிறார்கள். 5 முதல் 15 வரை வயதுள்ள குழந்தைகளுக்கு அரிசி 100 கிராம் பருப்பு 15 கிராம் கடலை எண்ணெய் 1 மில்லி லிட்டர் என்ற விகிதாச்சார அடிப்படையில் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. இதர செலவினங்களுக்கு ஒரு குழந்தைக்கு வகுப்பி 1 முதல் 5 க்கு பருப்பு பயன்படுத்தும் நாட்களுக்கு குழந்தை 1.க்குரூ.1.70 வீதமும், 6முதல் 10 வரையுள்ள ஒரு குழந்தைக்கு பருப்பு பயன்படுத்தும் நாட்களுக்கு குழந்தை 1க்கு 1.40ம் மற்ற நாட்களுக்கு குழந்தை 1க்கு ரூ.1.80ம் பைசா வீதம் தினசரி செலவீனம் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தினசரி பயன்பெறும் குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை 2151 ஆகும்.

சத்துணவு பணியாளர் நிர்வாகம் தொடர்பாக பணிக்கென ஒரு உதவியாளர் மற்றும் கணக்கர் என்ற நிலையில் ரூ.5200–20200 கிரேடு 2800 என்ற ஊதிய விகிதத்தில் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார். மேலும் சத்துணவு திட்டப் பணியாளர் ஊதியம் கிளை கருவூலம் மூலமும் பராமரிப்பு மற்றும் இதர செலவினங்களுக்கென சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்களால் ஒவ்வொரு காலாண்டிற்கும் முன்மானியம் வழங்கப்படுகிறது.

**தொழிற்கூடங்களும், தொழில்களும்:**

நகரில் தொழில் பகுதி தனியாக பிரிக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. நகர்நல அலுவலரால் தொழிற்சாலைகள் ஆய்வு செய்யப்படுகிறது.

**முதலீடுகள்:**

ஆண்டின் ஆரம்பத்தில் ரூ.159270567/– முதலீட்டில் இருப்பாக உள்ளது. அறிக்கை ஆண்டின் வருட இறுதியில் ரூ.172996161/– இருந்து வருகிறது.

**கொடிநாள் வசூல்**

கொடி நாள் வசூல் இந்நகராட்சிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் ரூ.2.70 இலட்சம் நிர்ணயம் செய்யப்பட்டு மேற்படி குறியீட்டில் ரூ.1.00 இலட்சம் வசூல் செய்யப்ப.ட்டது. இதில் 37 சதவீதம் முன்னேற்றம் காண்பிக்கப்பட்டுள்ளது.

**ஈமக்கிரியை மானியம்:**

அரசு உத்திரவின்படி ஆதிதிராவிடர் குடும்பத்தில் இறந்தவர்களின் சவ அடக்கத்திற்கு தலா ரூ.2500/– வீதம் வழங்கப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் நிதி பெறாததால் தொகை வழங்கப்படவில்லை. மிகப் பிற்பட்டோர் குடும்பத்தில் இறந்தவர்களின் சவ அடக்கத்திற்கு தொகை எதுவும் வழங்கப்படவில்லை.

அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில்கள் என்ற தலைப்பில் 3160 எண்ணம் உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

அறிக்கையாண்டில் 724 இறப்பு பதிவுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**பள்ளிக் கட்டிடம் கூரை மாற்றுதல்:**

நகராட்சியின் பராமரிப்பில் 2 உயர்நிலைப் பள்ளிகள், 6 நடுநிலைப் பள்ளிகள் மற்றும் 8 தொடக்கப் பள்ளிகள் உள்ளன. மேற்கண்ட பள்ளிகள் கீற்றுக் கொட்டகைகள் ஏதும் இல்லை.

**புதியக் கணக்கு முறை நடைமுறைப்படுத்தும் வீதம்:**

இந்நகராட்சியில் 2016–2017ம் ஆண்டு முதல் UTIS (Urban Tree Information system) நடைமுறைப்படுத்தப்பட்டு வரப்படுகிறது. இப்புதிய மென்பொருள் முறையின்கீழ் இந்நகராட்சி சொத்துகள் மற்றும் பொறுப்புகள் வரவினங்கள் மற்றும் செலவினங்கள் வகைப்படுத்தப்பட்டு கணக்கிடப்படுகிறது.

இக்கணக்கு முறையினை செயல்படுத்த அவ்வப்போது வழங்கப்படும் பயிற்சிகளில் பெரும்பான்மையான பணியாளர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

**ஆண்டுக் கணக்கு – 2020–2021**

2019–2020ம் ஆண்டுக்கான கணக்கு இறுதி செய்யப்பட்டு ஆண்டு கணக்கு 01.04.2021ல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**கணினி மயமாக்குதல்:**
**புதியக் கணக்கு முறை நடைமுறைப்படுத்தும் வீதம்:**

இந்நகராட்சியில் 2016–2017ம் ஆண்டு முதல் UTIS (Urban Tree Information system) நடைமுறைப்படுத்தப்பட்டு வரப்படுகிறது. இப்புதிய மென்பொருள் முறையின்கீழ் இந்நகராட்சி சொத்துகள் மற்றும் பொறுப்புகள் வரவினங்கள் மற்றும் செலவினங்கள் வகைப்படுத்தப்பட்டு கணக்கிடப்படுகிறது.

இக்கணக்கு முறையினை செயல்படுத்த அவ்வப்போது வழங்கப்படும் பயிற்சிகளில் பெரும்பான்மையான பணியாளர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

**கணினி மயமாக்குதல்:**

இந்நகராட்சி ஆவணங்கள் மற்றும் கடித தொடர்பு அனைத்தையும் கணினி மயமாக்கும் நோக்கத்தில் இத்திட்டத்தின்கீழ் உதவித் திட்ட அமைப்பாளர் ஒருவரும் புள்ளி விவரக் குறிப்பாளர் (காலியிடம்) ஒருவரும் பணிபுரிகின்றனர்.

நகராட்சியில் பதியப்படும் அனைத்து பிறப்பு இறப்பு, இறந்து பிறந்த குழந்தைகள் பதிவுகள் அனைத்தும் நாள்தோறும் பதியப்பட்டு சான்றிதழ்கள் அனைத்தும் கணினி மூலம் நகல் எடுக்கப்பட்டு காலதாமதம் இல்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. பிறப்பு இறப்பு சான்றிதழ் 2017ஆம் ஆண்டு வரை https://tnurbaneseva.tn.gov.inஎன்ற இணையவழி வழியாக வழங்கப்படுகிறது. 2018 ஆம் ஆண்டிலிருந்து http://gccapp.chennaicorporation.gov.in என்ற இணையவழி வழியாக பிறப்பு இறப்பு சான்றிதழ் வழங்கப்படுகிறது.

நகராட்சியின் வரவு செலவு கணக்கீடுகள் அனைத்து செலவுச் சீட்டுகள் (Vouchers) கணினியில் பதியப்பட்டு ஒவ்வொரு மாதமும் ஐந்தொகை (Trial Balance) எடுக்கப்பட்டு வருகிறது. ஆண்டு வரவு செலவு திட்ட அறிக்கை இணையதளத்தில் பதியப்பட்டுள்ளது.

இவ்வலுவலகத்திற்கென E-mail ID உள்ளது. E-mail விலாசம் commr.karaikudi @ tn.gov.in ஆகும். இதன் மூலம் மண்டல நிர்வாக இயக்குநர் அலுவலகம், நகராட்சி நிர்வாக ஆணையர், மாவட்ட ஆட்சியர் மற்றும் TNUDP III ஆகிய அலுவலகங்களுக்கு E-mail மூலம் அறிக்கைகள் அனுப்பப்படுகிறது.

இ–மெயில் என்பது மின்அஞ்சல் ஆகும். இதன் மூலம் பெறப்படும் கடிதங்களுக்கான பதில்களும் இ–மெயில் மூலம் அனுப்பப்பட்டு வருகிறது. மேலும் 01.04.2016 முதல் UTIS நெட்வொர்க் செய்யப்பட்டு நம்நகராட்சியில் உள்ள கணினியில் உள்ள விபரங்கள் அனைத்தும் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் செயலர் ஆகியோர் அவர்கள் இருக்குமிடத்தில் உள்ள கணினியில் தெரிந்து கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டு உள்ளது. சொத்து வரி, தண்ணீர் கட்டணம், தொழில்வரி மற்றும் வரியற்ற இனங்கள் ஆகிய இனங்களுக்கு நகராட்சி அலுவலகத்தில் உள்ள இரண்டு facilitation counter மூலம் உடனடியாக ரசீது பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் பொதுமக்களின் சேவையைக் கருத்தில் கொண்டு Collection Centre ஒன்று கல்லுக்கட்டியில் செயல்பட்டு வருகிறது.

இந்நகர் பகுதி மக்களின் வசதிக்காக இ–மெயில் இணைப்புடன் கூடிய கணினி வைத்திருப்பவர்கள் இந்நகராட்சியிலிருந்து செயல்படுத்தப்படவுள்ள தகவல் மையம், வசூல் மையம் போன்றவைகளும் பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் குறைதீர்க்கும் மனு ஆகியவைகளை அவர்கள் இருக்குமிடத்திலிருந்து கணினி மூலம் தெரிந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

<u>கணினி பிரிவு செயல்படும் விதம்:</u>

காரைக்குடி நகராட்சி அலுவலகத்தில் கணினி பிரிவிற்கென ஒரு திட்ட உதவி அமைப்பாளரும் ஒரு புள்ளி விபரக்குறிப்பாளருடன் (காலியிடம்) செயல்பட்டு வருகிறது. முதன் முதலாக 1.7.2000ம் தேதி முதல் பிறப்பு இறப்பு சான்றிதழ் கணினி மூலம் வழங்கப்பட்டு வருகிறது. 01.04.2003 இல் அனைத்து புதிய மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டு சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, வரியில்லா இனங்கள் மற்றும் இதர இனங்கள் கணினி வழியாக செயல்படுத்தப்பட்டு வந்தது.

சொத்துவரி சம்பந்தமான பதிவு கணினி மூலம் ஆன் லைன் செய்யப்பட்டு 11.8.2003ம் தேதியில் இருந்து அலுவலகத்தில் கணினி மூலம் சொத்து வரி ரசீது கொடுக்கப்பட்டு வருகிறது. தண்ணீர் கட்டணம் 09.02.2004ம் தேதி முதல் ஆன் லைன் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு உடனுக்குடன் நிலுவை விவரங்கள் தெரிவிக்கப்பட்டு உடனுக்குடன் பணம் கட்டியவர்களுக்கு ரசீது கொடுக்கப்படுகிறது. இதேபோல் வரியற்ற இனம், தொழில் வரி இனங்களுக்கும் கணினி மூலம் வசூல் செய்யப்பட்டு உடனடியாக இரசீது வழங்கப்படுகிறது.

பின்னர், 01.04.2016 முதல் UTIS (Urban Tree Information system) நடைமுறைப்படுத்தப்பட்டு கிட்டத்தட்l 23 Modules-ல் 21 Modules படிப்படியாக கணினி மயமாக்கப்பட்டு வருகிறது.

27.05.2004ம் தேதி முதல் கல்லுக்கட்டியில் External Counter அமைக்கப்பட்டு கணிணி மூலம் வசூல் செய்யப்படும் வகையில் நகர்மன்ற தலைவர் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டு பொது மக்கள் அந்த மையங்களில் தங்களது வரிகளை செலுத்தி பயன் அடையுமாறு செய்யப்பட்டுள்ளது.

மேலும் https://tnurbanepay.tn.gov.in என்ற இணையவழி வழியாக பொதுமக்கள் தாங்கள் இருக்கும் இடத்திலிருந்தே சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி, வரியற்ற இனங்கள் மற்றும் தொழில் உரிமக் கட்டணம் போன்றவற்றை செலுத்தி ரசீது எடுத்துக் கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டு நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. மேலும், https://tnurbanepay.tn.gov.in வழியாக பொதுமக்கள் புதிய தொழில் வரி, புதிய தொழில் உரிமக் கட்டணம் போன்றவற்றை விண்ணப்பிக்கலாம். அதன்மீது மேல்நடவடிக்கை தொடரப்பட்டு கணினி மூலம் ரசீது கொடுக்கப்படுகிறது.

காசாளருக்கென தனியாக ஒரு கணினி ஒதுக்கப்பட்டு உள்ளது. இதர வரவினங்களுக்கென பதிவுகள் கணினியில் பதிவு செய்யப்பட்டு உடனடியாக கணினியில் இருந்து ரசீது பிரிண்ட் செய்து கொடுக்கப்படுகிறது.

கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி சான்றிதழ்கள் online வழியாக பதிவு பெற்ற வரைவாளர்கள் மூலம் கணினியில் பதியப்பட்டு அலுவலகத்திற்கு கணினி வழியாகவே அனுப்பப்பட்டு மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வழங்கப்படுகிறது. சொத்துவரி, குடிநீர் கட்டணம் மற்றும் பெயர் மாற்ற உத்திரவு கணினியில் பதியப்பட்டு கணினி மூலம் வழங்கப்படுகின்றன.

மற்றும் புதிய கணக்கு முறைகள், Solid Waste Management வாகன விபரங்கள் நம் அலுவலகத்தின் அசையும் மற்றும் அசையா சொத்து இனங்கள், வரியற்ற இனங்கள் முதலியவை கணினியில் பதிவு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

நம் அலுவலகத்தில் உள்ள அலுவலர்களின் சம்பளப் பட்டியல் சம்பந்தமான விபரங்கள் கணினி மூலம் கொடுக்கப்பட்டு சம்பள விபரங்கள், பிடித்தங்கள் சம்பந்தமானவற்றை கணினி மூலம் கொடுக்கப்பட்டு வருகிறது.

மாநிலத்தில் உள்ள அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மூன்றாம்நிலை நகராட்சிகளுக்காக ஒரு இணையதளம் UTIS மூலம் உருவாக்கப்பட்டு உள்ளது. அதனது முகவரி https://tnurbantree.tn.gov.in/karaikudi இதில் காரைக்குடி நகராட்சியின் முழு விபரங்கள் அறிந்து கொள்ளலாம். மேலும் ஒவ்வொரு மாதம் நடக்கும் கூட்டம் மற்றும் கூட்டத் தீர்மானம் இணையதளத்தில் மாதவாரியாக பதியப்பட்டு வருகிறது. மக்களின் குறைகளை சம்பந்தப்பட்ட துறை அதிகாரியிடம் தெரிவிக்க அதிகாரியின் அலைபேசி மற்றும் துறை அதிகாரி விபரம் இணையதளத்தில் பெற வசதிகள் செய்யப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர் பற்றிய விபரம் மற்றும் காலிப் பணியிட விபரம் பதியப்பட்டுள்ளது.

**தேசிய நகர்புற வாழ்வதார இயக்கம்(NULM):**

தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் 2015/2016ல் மகளிர் திட்டம் மூலம் செயல்படுத்த நடைமுறைபடுத்தப்பட்டது. 2015 ஜுன் இத்திட்டத்திற்கான சமுதாய அமைப்பாளர்கள் மகளிர் திட்ட அலுவலகம், சிவகங்கைக்கு மாற்றப்பட்டுள்ளார்கள். இத்திட்டத்தில் 2020–21க்கு எந்த தொகையும் நமது நகராட்சிக்கு கிடைக்கவில்லை.

1. நகர்புற தெருவோர விற்பனையாளருக்கு உதவி செய்யும் திட்டம்:

2016–17ல் மட்டும் நகர்புற தெருவோர வியாபாரிகளுக்கு உதவி திட்டம் ரூ.256000/– ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதற்கான தொகையில் 19.02.2019ல் நகர்புறங்களில் 10 இடத்தில் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு ரூ.1,50,000 செலவு செய்யப்பட்டது.

2. நகர்ப்புற வீடற்ற ஏழைகளுக்கு தங்கம் விடுதி திட்டத்திற்கு 2020–21ல் அனுப்பப்பட்ட தொகையில் ரூ.256000/– நமது நகராட்சி மூலம் 5 பயனாளிகள் (RCDS) தொண்டு நிறுவனத்திற்கு செலவின தொகையாக ரூ.256000/– கொடுக்கப்பட்டது.

**தணிக்கை:**

அறிக்கை ஆண்டில் ஆரம்பத்தில் தணிக்கைத் தடைகள் 387 நிலுவையாக உள்ளது. தணிக்கை கூட்டமர்வின் மூலம் 96 தணிக்கைத் தடைகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. தற்போது 287 பத்திகள் நிலுவையில் உள்ளது.

**முடிவுரை:**

அறிக்கை ஆண்டில் நடைபெற்ற சாதாரண அவசர மற்றும் சிறப்புக் கூட்டங்களில் சேர்க்கப்பட்ட அனைத்து பொருள்கள்மீது தீர்மானம் நிறைவேற்றப்பட்டன. நிறைவேற்றப்பட்ட அனைத்து பொருள்கள் மீது மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு பொதுமக்களுக்குத் தேவையான மிக அத்தியாவசியமான வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நகரில் அறிக்கையாண்டில் தொற்று நோய்கள் பரவா வண்ணம் மற்றும் இறப்பு ஏற்படா வண்ணம் இருக்க நோய் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. அறிக்கை ஆண்டில் பிளேக், காலரா, மலேரியா காய்ச்சல், நுரையீரல் காய்ச்சல், மூளைக் காய்ச்சல் , மஞ்சள் காமாலை, இசிவு, கக்குவான், தொண்டை அடைப்பான் போன்ற நோய்களால் இறப்பு ஏதும் ஏற்படவில்லை. நகரில் பொது சுகாதாரப் பணிகள் திருப்திகரமாக உள்ளது.

மேலும் இந்நகராட்சி பல்வேறு பணிகளின் பொறுப்பை ஏற்றுள்ள நகர் நல அலுவலர், நகர் நலப் பணியாளர்கள், நகர்மன்றப் பொறியாளர் மற்றும் அதன் பணியாளர்கள் நகர் அமைப்பு அலுவலர் மற்றும் நகர் அமைப்பு ஆய்வர்கள் ஆகியோர்களுக்கும் பொதுமக்கள் அத்தியாவசியத் தேவையான குடிநீர் இணைப்புகள் வழங்குதல், கட்டிட மனுக்கள்மீது அனுமதி வழங்குதல், வரிக்குறைப்பு மனுக்கள்மீது துரிதமான உத்திரவு மற்றும் அனைத்து பொதுமக்களின் அத்தியாவசிய பணிகளை உடனுக்குடன் நிறைவேற்றுவது போன்ற பணிகளில் எவ்வித தாமதமின்றி நடவடிக்கை எடுத்து கடினமாக உழைத்த அனைத்து நகராட்சிப் பணியாளர்களுக்கும், மருத்துவ அலுவலர்களுக்கும், பேறுகால உதவியாளர் மற்றும் ஆயாக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

25-6-21.

ஆணையர்

காரைக்குடி நகராட்சி

# 30.06.2021ம் தேதிய காரைக்குடி நகர்மன்றத் தீர்மான எண்.46 ன் நகல்

காரைக்குடி நகராட்சியின் 2020–2021ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

பதிவு செய்யலாம்.

தீர்மானம்: அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது,

(ஒம்/..க.ரெங்கராசு)
தனி அலுவலர்/ஆணையர்(பொ)

// உண்மை நகல் //

ஆணையர்(பொ)
காரைக்குடி நகராட்சி